

20 ஐப்பசி
அக்டோபர் - டிசம்பர் 2016

மலர் 5 இதழ் 4

KAAVYA TAMIL ISSN 2277 - 9221

விலை ₹ 100

# காவ்யா தமிழ்

கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்



சுந்தரபாண்டியனின்- அக்னீப்ரவேசம்

மா.அரங்கநாதனின் சிறுகதை - குடியிருப்பு

நீலபத்மநாபனின் கட்டுரை - ஜெயகாந்தன்

கழனியூரனின் வாய்மொழி - ஆவணங்கள்

சிங்கம்புழை ரமணனின் செவ்வாழை - கவிதை

அ.கா. பெருமாளின்–

தோல்பாவை கூத்து

காவ்யா சண்முக சுந்தரத்தின் –

தேச விடுதலையில் தேவரின் பங்

சந்திரசேகரின் – கபாலி விமர்சனம்

# காவ்யா தமிழ் - 20

## அக்டோபர் - டிசம்பர் - 2016

ஆசிரியர் பேரா. சு.சண்முகசுந்தரம்
நிர்வாக ஆசிரியர் திருமதி முத்துலட்சுமி

ஆசிரியர் குழு

பேரா. ருக்மணி, கா. அய்யப்பன், சென்னை
பேரா. ஆ. ஏகாம்பரம், சென்னைப் பல்கலைக்கழகம்
பேரா. அ.கோவிந்தராஜன், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
பேரா.திருநாவுக்கரசு, புதுவைப் பல்கலைக்கழகம், சிலம்பு செல்வராசு,
பேரா. தியாகராஜன், நெல்லையப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
பேரா. தி. பெரியசாமி, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
பேரா. ரா. செயராமன், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
பேரா. ஜெயகிருஷ்ணன், விஜயலட்சுமி, கேரளப் பல்கலைக்கழகம்
பேரா. ஓ. முத்தையா, கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்
பேரா. சத்தியமூர்த்தி, செரவிசங்கர், காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
பேரா. தே. ஞானசேகரன், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
பேரா. அழகேசன், தூத்துக்குடி
பேரா. நா. சந்திரசேகரன், அறவேந்தன், தில்லிப் பல்கலைக்கழகம்
ஈஸ்வரன் தேசியக் கல்லூரி, தேவி, உருமுதனலட்சுமி கல்லூரி, திருச்சி
பேரா. ப. கமலக்கண்ணன், சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு
திருச்செந்தூர் கதிரேசன், ஆதித்தனார் கல்லூரி
பேரா. சிவ. விவேகானந்தன், வெங்கடேஸ்வரா கல்லூரி, தில்லி
பேரா. ஆ.சண்முகம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை
தென்காசி ராஜாமுகமது, பெரியகுளம் நீலபாண்டியன்
ராஜபாளையம் நரேந்திரகுமார், சிவகாசி திலகபாமா,
மார்த்தாண்டம் மகேஷ்குமார், முத்தாலங்குறிச்சி காமராசு,
கு.கணேசன், சேலம்
பெங்களூர் சீனிவாசன், கிருஷ்ணசாமி
சிங்கப்பூர் ஜெயந்திசங்கர், சீதாலட்சுமி

இதழ்ப் பொறுப்பு : ம. பிரகாஷ்
இதழாக்கம்: கே.எல். லட்சுமி

16. இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்
கோடம்பாக்கம், சென்னை - 6000 024.
போன் : 044 - 23726882, 9840480232
Email : kaavyabooks@gmail.com.
Website : www.kaavyaa.com.

**சந்தா விவரம்:**
தனி இதழ் ரூ.100/- ஆண்டு சந்தா ரூ.400/-
மூன்றாண்டு சந்தா ரூ.1000/-
(சலுகை - 25% கழிவில் நூல்கள்)
ஆயுள் சந்தா ரூ.5000/-
(சலுகை - 30% கழிவில் நூல்கள்)

**விளம்பரம் விபரம்:**
முன் / பின் உள் அட்டைகள் ரூ.10000/-
பின் அட்டை ரூ.15,000/- முழுப்பக்கம் ரூ. 3000/-
உள்ளே வண்ணப் பக்கம் ரூ.6000/-

தொகையை **KAAVYA** பெயரில் காசோலையாகவோ வரைவோலையாகவோ அல்லது பணவிடை **(M.O)** மூலமோ அனுப்பலாம். **KAAVYA** பெயரில் **BANK OF INDIA, KODAMBAKKAM, CHENNAI - 24** கிளையில் 801420100003923 என்ற **A/C** எண்ணில் செலுத்தலாம். **(IFSC: BKID 0008014).**


**நாடகம்** - சுந்தரபாண்டியன் - அக்னி பிரவேசம் /06
**கவிதை** - அமரன், சங்கம்புழை ரமணன் (மலையாளம்)/11
ஏ.எம்.சாலன், ஆதவப்ரியை/15
**சிறுகதை** - மா. அரங்கநாதன் - குடியிருப்பு/16
கொ.மா.கோதண்டம் - நாட்டியக்காதல்/19
தாரமங்கலம் வளவன் - உயிலில் இருக்கும் செய்தி/23

**கட்டுரைகள்:**

பேரா. காவ்யா சண்முகசுந்தரம் - தேசவிடுதலைக்குத் தேவருடன்.../25
வளவதுரையன் - மனிதநேயமும் மறைந்திருக்கும் சாதிகளும்/41
சு.செயராமன் - அடிகளாசிரியர் தொல்.பொருள்./43
கு. கதிரேசன் - நாட்டார் வழிபாட்டில் திருவிளக்கு பூசை/49
பேரா. உமாதேவி - பெண்மொழி அரசியல்/54
பேரா. ந. வேலுசாமி - சில நேரங்களில்/61
நீலபத்மநாபன் - ஜெயகாந்தன்/67
தலைநகர் தில்லியில் தமிழரும் தமிழ்க்கல்வியும் - ச.சீனிவாசன் & சிவ.விவேகானந்தன்/69
கழனியூரன் - வாய்மொழிமரபும் ஆவணக் குறிப்புகளும்
தன்ராஜ் - பண்பாட்டு அறிவியல் பல்லி

**ஆய்வுலகம்:**

மணிமேகலையில் சமுதாய அறங்கள் - குருஞானாம்பிகா/81
புறநானூறு - கடைநிலை துறை- சோ. ராஜலட்சுமி/89
புறநானூறில் காணலாகும் நீர்நிலைப் பதிவுகள்- ரா.விஜயலட்சுமி/93
கு. கணேசன் கவிதைகளின் பாடுபொருள் - இரா. சித்ரா/96
ஒப்புமையாக்கத்தின் வழிமொழிகற்றல் - த. சத்தியராஜ்/100
நாட்டுப்புறப் பாடல்களில் குறியிடம் - பிரிதா. செ./105
கேரள மாநிலத் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் வேளாண்மை - ரமேஷ். G./109
தமிழ்ச்செல்வியின் புதினங்களில் நாட்டுப்புறப்பாடல்கள் - க. புவனேஸ்வரி/112
ஐங்குறுநூறு - தொண்டிப் பத்தில் வருணை - ஈஸ்வரன்/116
ஜெர்மானியர்களின் தமிழ்ப்பணி - ச. முருகேசன்/119
மலையாள மொழி யாப்பிலக்கண ஆய்வுகள் - L.Sivavenkates/124
மேற்கு வங்காள எழுத்துலகில் மஹாசுவேதாதேவி - சு.சந்திரகுமார்/127
கேரளமாநிலத் தமிழ்வழிக் கல்வியில் சமூக அறிவியல் பாடத்திட்டம் - ஒரு மதிப்பீடு - ஜெ.ஜெயசங்கர்/131
தமிழ்த்திரை மொழி
கபாலியும் வயதான பந்தயக் குதிரையும் - த.நா.சந்திரசேகர்/135
தோல்பாவைக் கூத்து - அ.கா.பெருமாள்/140
ஸ்டீபன் ஹாக்கின்ஸ், ஜேன் - ராம்பிரசாத்/150
நூல் உருவாக்கம் - செ.வை. சண்முகம்/156



# தலைநகர் தில்லியில் தமிழரும் தமிழ்க் கல்வியும்

முனைவர் ச. சீனிவாசன்,

முனைவர் சிவ. விவேகானந்தன்

தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து, வேலை நிமித்தமாகவும், விவசாய நலிவு காரணமாகப் பிழைப்பு தேடியும், சமூக ஒடுக்குமுறை காரணமாகவும், வியாபாரம் தொடர்பாகவும் தமிழர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தில்லியில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். தில்லி மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி சுமார் பதிமூன்று லட்சம் தமிழர்கள் தில்லியில் வாழ்கிறார்கள்.

தில்லியிலுள்ள கரோல் பாக், பகாட் கஞ்ச், சக்குர்பூர், ஆஸ்ரம், கல்யாண்புரி, திர்லோக்புரி, இந்தர்புரி,கால்காஜி,தக்ஷின்புரி, மயூர்விகார், பப்பன்கிலா, தமிழர் என்க்லேவ், ஜனக்புரி, முனீர்க்கா, ஆர்.கே.புரம்,முதலான பல பகுதிகளில் தமிழர்கள் பரவி வாழ்ந்து வருகின்றனர். தில்லியின் துணை நகரமான துவாரகாவிலும், காஜியாபாத், நொய்டா, குருகிராம், ஃபரிதாபாத் ஆகிய தலைநகர் மண்டலப் பகுதிகளிலும் தமிழர்கள் குடியேறி வாழத் தலைப்பட்டுள்ளனர்.வேலை, வியாபாரம் மற்றும் பல்வேறு காரணங்களை முன்னிட்டுத் தில்லியில் தமிழர்களின் குடியேற்றம் இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

தில்லிவாழ் தமிழர்களில் ஒரு பகுதியினர் தில்லி மாநில அரசு மற்றும் மத்திய அரசு அலுவகங்களில் தங்களின் கல்வித் தகுதிகளுக்கேற்ப ,IAS, IPS முதலான உயர்பதவிகளும், நடுத்தர மற்றும் நான்காம்தர வேலைகளும் செய்துவருகின்றனர். பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்த முதல் தலைமுறையினர் தற்போது கௌரவமான பணிகளில் சேர்ந்துள்ளனர். பள்ளி, கல்லூரி ஆசிரியர்களாகவும், வங்கி அதிகாரிகளாகவும், கணினி நிபுணர்களாகவும் திகழ்கின்றனர்.

தமிழ்த் துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி, (தில்லிப் பல்கலைக்கழகம்), புது தில்லி- 110 021